RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# தொல்காப்பியம் கூறும் கவிதைக்கலையின் உட்கூறுகள்

ஆ.பி. ஜெபென்ஸி [அ], கு.ச. ஜெயஸ்ரீ [அ]

[அ] தமிழாய்வு மையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி-629802.

# The Components of Poetic Art as Described in the Tolkappiyam

A.P. Jabency [a, *], K.S. Jaya Shree [a]

[a] Research Centre of Tamil, Lekshmipuram College of Arts and Science, Neyyoor, Kanyakumari-629802.

* Corresponding Author:

**ABSTRACT**

Tolkappiyam, the oldest extant work of Tamil grammar and poetics, is regarded as one of the earliest literary and linguistic treatises available to the Tamil people. Linguistic scholars generally date the work to more than 2,700 years ago. Throughout the text, Tolkappiyar frequently employs expressions such as enba, enmanar, kooruba, and mozhiba in more than two hundred instances, indicating that he drew upon the views of earlier grammarians, scholars, artists, and learned predecessors. These references demonstrate the existence of a rich intellectual tradition and suggest that advanced literary works, artistic treatises, and scientific texts had already flourished before the composition of the Tolkappiyam. The text itself preserves valuable evidence of this earlier literary and cultural heritage. The existence of earlier Tamil grammatical works prior to the Tolkappiyam can therefore be reasonably inferred. Through the Seyyuliyal (Poetics) section, Tolkappiyar establishes the theoretical foundations of Tamil poetry by explaining its essential principles and structural components. His discussions also imply that a highly developed spoken language and sophisticated literary traditions had already evolved before his time. Furthermore, the Tolkappiyam recognizes the close relationship between poetry, language, and music. Music, as a universal art capable of evoking human emotions beyond linguistic boundaries, occupies an important place in Tamil literary thought. Consequently, literary criticism requires not only an understanding of language and literature but also an appreciation of artistic and musical aesthetics. This article examines the structural elements of poetic art as presented in the Tolkappiyam, highlighting their significance in the development of classical Tamil poetics and literary criticism.

**Keywords:** Tolkappiyam, Poetics, Tamil people, Tamil grammar.

## முன்னுரை

அறிஞர்கள் பல்வேறு வகையான இலக்கியப் படைப்புகளை பரிசோதித்ததால், தமிழ் இலக்கியத்தில் பிற கவிதை வடிவங்களும் இலக்கியத்தின் வளர்ச்சியுடன் பரிணமித்தன. தமிழ் மொழியின் இலக்கணம் குறித்த தமிழ் இலக்கியத்தின் ஆரம்ப காலப் படைப்பான தொல்காப்பியம், கவிதைகளின் பல்வேறு வடிவங்கள் பெரும்பாலும் காதல் கவிதைகள் இயற்றுவதற்கு ஏற்றதாக இருந்ததாகக் கூறுகிறது. தொல்காப்பியத்தின் படி, பல வகையான கவிதை வடிவங்கள் உள்ளன. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் வெண்பா, கி.பி2 ஆம்நூற்றாண்டுக்குப் பிறகு நன்கு அறியப்பட்டது. தொல்காப்பியம் பண்ணாட்டி என்ற மற்றொரு பிரபலமான வடிவம் இருப்பதாகக் குறிப்பிடுகிறது, இந்த வகையான கவிதை வடிவம் நாட்டுப்புறஇசையிலிருந்து நேரடியாக பெறப்பட்டதாக பரவலாக

நம்பப்படுகிறது. இசை வடிவங்களில் இருந்து தோன்றிய பல கவிதை வடிவங்கள் உள்ளன. இலக்கண மற்றும் கவிதை மரபுகளை முறையாக நிறுவிய பின்னரும், தமிழ் இலக்கியத்தில் கவிஞர்கள் பாரம்பரிய வசன வடிவங்களை விரும்பினர். தொல்காப்பியர் செய்யுளியலின் மூலமாக எடுத்துரைக்கும் கவிதைக் கலைக்கான அடிப்படைகளையும், கவிதை எழுதுவதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைப்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## இலக்கியமும் கலைகளும்

இலக்கியம் ஒரு கலை. கலையென்றால்,சொல்லுகிற அல்லது சொல்ல விரும்புகிற செய்திகளை அழகும் நேர்த்தியும் படச் சொல்வது; காண்பார், கேட்பார் அல்லது படிப்பார் மனதில் சுவைபடவும், அவர்கள் மனம் கொள்ளுமாறு, சிந்தையில் அல்லது உணர்வில் ஓரளவாவது அசைவையும் தாக்கத்தையும் ஏற்படுத்துமாறும் அமைவதாகஅமைந்துள்ளது. மேலும் மேலும் காணுமாறும் கேட்குமாறும் படிக்குமாறும் ஓர் ஆர்வத்தைத் தூண்டுவது படைப்பாற்றல் பண்பு. கலைகளின் அடிப்படைப்பண்பும் அதுவே என்பர். கவிதை, இலக்கியக் கலையின் அரசி கலை அமைவதை அறியமுடிகிறது. என்று அழைக்கப்படுகிறது. ஏனைய இலக்கிய வகைகளுள் மூத்ததாகவும், மையமானதாகவும் கலை அமைவதை அறிய முடிகிறது.

## மூன்று கலைகள் (முத்தமிழ்)

பழந்தமிழில் சிலம்பு முதற்கொண்ட பல நூல்களில் ஆடல், பாடல், இசை அல்லது இயல், இசை, நாடகம் என்று மூன்று கலைகள் ஒன்றோடு ஒன்று இணைந்தும் தழுவியும் வருபவையாகக் கூறப்படுகின்றன. இயல் என்பது பாடல் அல்லது கவிதையைக் குறிக்கும். இந்த மூன்று கலைகளும் சேர்ந்து முத்தமிழ் என்று சொல்லப்படுகிறது. இவற்றுள் இசை நடுத்தரமானது. அது கவிதைக்கும் வேண்டும்; ஆடல் அல்லது கூத்துக்கும் வேண்டும். இம்மூன்று கலைகளும் ஆதி இலக்கண நூலான தொல்காப்பியத்தை அடியொற்றி அமைந்துள்ளதையும் அறியமுடிகிறது.

“ஆடல்,பாடல்,இசையே, தமிழே” என்று அரங்கேற்று காதையில் (மாதவி, அரங்கேற்றுவதை வருணிக்கும் இயல்) இளங்கோவடிகள் மூன்று கலைகளையும் இணைத்துக்கூறுவதையும் அறியமுடிகிறது. மேலும், பாடல் எனும் கலை, இசையோடு சேர்ந்து அமைவதையும் அவர் கூறுகிறார்.

“யாழுங் குழலும் சீரும் மிடறும்

தாழ்குரல் தண்ணுமை பாடலொடு இவற்றின்

இசைந்த பாடல் இசையுடன் படுத்து

கவியது குறிப்பும் ஆடல் தொகுதியும்

பகுதிப் பாடலும் கொளுத்தும் கலை...(அரங்கேற்றுகாதை 26-34)

சிலம்பின் இந்த வரிகள், மூன்று கலைகளும் சேர்ந்து இயங்குவதையும், பாடலுக்கு இசை ஒரு பகுதியாக அமைவதையும், கவிஞனுடைய குறிப்பு அல்லது கோட்பாடும் அதிலே உள்ளது என்பதையும் சொல்லுகின்றன.

## கவிதையின்தோற்றம்

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மரபுக்கவிதை வடிவம் இன்றும் நிலைபெற்று வருகின்றது. இலக்கியம் என்றாலே அது மரபுக்கவிதைதான் என்று விளங்கிய கால கட்டங்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் காண முடிகின்றது.

‘முதலில் தோன்றியது, மிகுந்த கட்டுப்பாடு இல்லாததாகிய ஆசிரியப்பாவாகும். ஆசிரியப்பாவை அடுத்து அதனோடொத்த இயல்புடைய வஞ்சிப்பா தோன்றியதெனலாம். அடுத்துக் குறள் வெண்பா

உள்ளிட்ட பலவகை வெண்பாக்களும், பிறகு மருட்பாவும், அதன் பிறகு கலிப்பாவும்,**பரிபாடலும்** தோன்றியிருத்தல் வேண்டும். அடுத்து வந்த காலத்தில் விருத்தப்பா, தாழிசை, துறை என்பன பயன்பாட்டிலமைந்தன' என்பார் அ.கி.பரந்தாமனார்.

யாப்பிலக்கணம் குறித்து அகத்தியம், அவிநயம், காக்கைபாடினியம், கையனார் யாப்பியல், சங்க யாப்பு, பல்காயம், பனம்பாரம், பெரிய பம்மம், மயேச்சுரர் யாப்பு, மாபுராணம், வாய்ப்பியம், யாப்பருங்கலம் எனப் பல்வேறு இலக்கண நூல்கள் காலந்தோறும் தோன்றி வந்துள்ளன. இந்நூல்கள் தொல்காப்பியக் காலம் சார்ந்தும்,காரிகைக்கு முன்னரும் தோன்றியனவாகும்.காரிகைக்குப் பின்,வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம்என்னும் நூல்களும் யாப்பிலக்கணம் உரைப்பனவாய் அமைந்துள்ளன.

கி.பி.1930-1945 காலகட்டத்தில் மணிக்கொடிக் குழுவினர், பாரதியாரை அடுத்துப் புதுக்கவிதை இயற்றியவர்களாவர். அவர்களுள் கு.ப.இராசகோபாலன், ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன்ஆகியோர்குறிப்பிடத்தக்கவர்கள்.மணிக்கொடி இதழின் காலகட்டத்திலேயே ஜெயபாரதி, சூறாவளி, கிராம ஊழியன், கலாமோகினி போன்ற இதழ்களிலும் புதுக்கவிதைகள் பல இடம்பெற்றுள்ளன.

கி.பி.1950-1970 ஆண்டுகளில் இரண்டாம் நிலை வளர்ச்சி அமைந்தது என்பார் ந.சுப்புரெட்டியார்.எழுத்து, இலக்கிய வட்டம், நடை போன்ற இதழ்களில் புதுக்கவிதைகள் வெளிவந்தன. 1962-ஆம் ஆண்டு புதுக்கவிதை வரலாற்றில் சிறப்புடையதாககருதப்படுகிறது.

எழுபதுகளில் தாமரை, கசடதபற, வானம்பாடி போன்ற இதழ்களில் புதுக்கவிதைகள் வெளியிடப் பெற்றுச் சிறப்புற்றன.புள்ளி, வெள்ளம், உதயம், கதம்பம், ரசிகன், நீ, அலைகள், ஐ என்னும் புதுக்கவிதைச் சிறு தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.புதுக்கவிதை, ஈழத்திலும் மறுமலர்ச்சி, பாரதி, ஈழகேசரி, மல்லிகை, க-வி-தை போன்ற இதழ்களில் சிறப்புற வளர்ந்து வந்துள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

புதுக்கவிதை குறித்த செய்திகளையும் தெளிவினையும் புலப்படுத்தி வரன்முறைப் படுத்திய பெருமை திறனாய்வு நூல்களுக்கு உண்டு. இவை ஒரு வகையில் மரபுவழி யாப்பிலக்கண நூல்களை ஒத்தன எனலாம்.புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்பது வல்லிக்கண்ணன் எழுதியது. புதுக்கவிதை போக்கும்நோக்கும் என்னும்நூல் ந.சுப்புரெட்டியாரால் எழுதப்பட்டது.புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை என்பது கவிஞர் பாலாவின் படைப்பு. புதுக்கவிதை வளர்ச்சிக்கு இத்தகு நூல்களும் பெரும்பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

## கவிதை இலக்கியம்

'இச்சொல்லை நீக்கி வேறொரு சொல்லை இங்கு அமைத்தால் இக்கருத்தும் அமைப்பும் சிறக்காது' என்று கருதுமளவிற்கு இன்றியமையாத சொற்சேர்க்கையைக் கொண்டு திகழ்வது கவிதை. படிப்போரும் கேட்போரும் மகிழும் வண்ணம் நல்ல நடையுடையதாக விளங்க வேண்டியது கவிதைக்கு அவசியமானதோர் இலக்கணமாகும். கருத்து, உணர்ச்சி, கற்பனை, வடிவம் ஆகியவற்றால் பிற எல்லாவற்றினும் சிறந்திருக்க வேண்டியது கவிதைக்கு மிகத் தேவையான பண்பாகும்.

இலக்கண நூல்களைப் பயின்றும், இலக்கியங்களை இடைவிடாது படித்தும், யாப்பு விதிகளையும், ஓசை நலன்களையும் உள்வாங்கிக் கொண்டு, சீரும் தளையும் சிதையாமல் வரையறுத்த அமைப்பில் பாப்புனைவது மரபுக்கவிதை எனப்படும். இலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் உணர்ச்சி வெளிப்படப் பாடுவது புதுக்கவிதையாகும். இவையன்றி இசைப் பாடல்களும் (சந்தப் பாடல்கள்) கவிதை என்பதற்குள் அடங்குவனவாகும்.கவிதை என்பது, அடிப்படையில் பாடல் என்றே அறியப்படுகிறது. சொற்களின் ஓசை ஒழுங்கு முறையோடு, இசை தழுவி அமைவது, பாடல் அல்லது கவிதையாகும்.

## தொல்காப்பியர் குறிப்பிடும் செய்யுளியல்

தொல்காப்பியர் இலக்கிய முழுமையையும் அவைபாட்டு உறுப்பேயானாலும், திறனாய்வேயானாலும் இலக்கியத்தின் உட்கூறுகள் என்றே கூறுகின்றார். செய்யுளியலின் முதல் நூற்பா இலக்கியத்துள் அமையும் 34 உறுப்புக்களைக் குறித்துவிவரிக்கின்றது. அவை,

"மாத்திரையெழுத்தியல் அசைவகைஎனாஅ

யாத்தசீரேஅடியாய்ப் பெனாஅ

மரபேதூக்கேதொடைவகைஎனாஅ

நோக்கேபாவேஅளவியல் எனாஅ

நல்லிசைப் புலவர் செய்யுளுறுப்பென

வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே." (தொல்.செய். நூற்: 310) மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா வகைகள், அளவியல், திணை, கைக்கோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைவு என்றவாறுக் கூறப்பட்ட மாத்திரை முதலாக வரும் முப்பத்து நான்கும் செய்யுள் உறுப்புகள் என்று நல்ல புகழையுடைய புலவர்கள் அறிவுவன்மையால் வகுத்து உரைத்துள்ளமைத் தெரிகின்றது.

## எழுத்து

தமிழில் எழுத்து என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவை 'அ'முதல் 'ன' ஈறாக உள்ள முப்பதும் அவற்றை சார்ந்து வரும் தன்மையுடைய மூன்று சார்பெழுத்துக்களும் உள்ளன என்பது தமிழண்ணலின் கருத்தாக அமைகிறது.

"எழுத்தெனப் படுப

அகரமுதனகரவிறுவாய்

முப்பஃதென்ப

சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே."(தொல்.எழு.நூற்: 1)

அகரமாகிய முதலை உடையனவும் னகரமாகிய இறுவாயினை உடையனவுமாகிய முப்பதென்று சொல்லுவர். சார்ந்துவருதலாகிய இலக்கணத்தினை உடைய மூன்றும் ஆனவிடத்து முப்பத்து மூன்று என்று சொல்லுவர் புலவர் என்று இளம்பூரணரும் எடுத்துரைக்கின்றனர்.

## அசை

ஒருசொல் அல்லதுசீரைச் சொல்லும் போது, குறில், நெடில், ஒற்று என்னும் மூவகை எழுத்துக்களால் அசைக்கப்படுவது அசை எனப்படும். அசை சீருக்கு உறுப்பாக அமையும் என்பது அடோன் தமிழ் இலக்கணத்தில் கருத்தாக அமைகின்றது.

"குறிலேநெடிலேகுறிலிணைகுறில்நெடில்

ஒன்றொடுவருதலொடுமெய்ப்படநாடி

நேரும் நிழரயுமென்றிசிற் பெயரே" (தொல்.செய். நூற்: 312) குறிலும் நெடிலும் குறிலிணையும் குறினெடிலும் தனியேவரினும் ஒற்றோடுவரினும் ஆராயும் காலத்துநேரசையும் நிரையசையும் எனப் பெயராகும் என்னும் இளம்பூரணர் எடுத்துரைப்பதை அறிய முடிகிறது.

## நேர்பு, நிரைபு அசைகள்

குற்றியலுகரம், முற்றியலுகரம் ஆகிய இரண்டும் நேர் மற்றும் நிரை அசைகளுடன் பொருந்தி ஈற்றிலர் உகரம் பெற்றுவரின் நேர்பு நிரைபு என்று தமிழண்ணல் குறிப்பிடுவதை அறிய முடிகிறது.

"இருவகைஉகரமோடியைந்தவைவரினே

நேர்புநிரைபும் ஆகும் என்பகுறிலிணைஉகரம் அல்வழியான" தொல்.செய். நூற்: 313)

நேர், நிரை என்னும் இரண்டசையும் குற்றியலுகரமில்லாத முற்றியலுகரமும் பொருந்துவரின் நேர்பு, நிரைபு என்னும் அசைத் குற்றெழுத்தோடு பொருந்தி உகரம் வரும்போது நேர்பசையாகாது என்னும் இளம்பூரணரின் கருத்தை அறிய முடிகிறது.

## சீர்

ஓர் அசை தனியாகவோ, பல அசைகள் சேர்ந்தோ ஓர் ஒழுங்குபடச் செய்யுள் அடிகளில் அமைவது 'சீர்' எனப்படும் என்பது அடோன் தமிழ் இலக்கணத்தின் கருத்தாக அமைகின்றது.

"ஈரசைகொண்டு மூவழசபுணர்த்துஞ்

சீரியைற் திற்றதுசீரெனப் படுமே" (தொல்.செய். நூற்: 320)

இரண்டசை கொண்டுபுணர்ந்தும், மூன்றசைகொண்டுபுணர்ந்தும் ஓசைபொருந்தி இயற்றப்படுவது சீரெனப்படும் என்னும் இளம்பூரணரின் கருத்தினை அறிய முடிகிறது.

## அடி

சீர்கள் பல தொடர்ந்து வந்து ஓர் அடியாகஅமைந்துசெய்யுளுக்குஅறுப்பாவது 'அடி' எனப்படும் என்கிறது அடோன் தமிழ் இலக்கணம்.

"நாற்சீர் கொண்டதடியெனப் படுமே."(தொல்.செய்.நூற்:340)

நான்குசீர் ஒழுங்கு தொடுத்துவருவதனை அடியென்று சொல்லப்படும் என்று இளம்பூரணர் எடுத்துரைப்பதை அறியமுடிகிறது.

## யாப்பு

செய்யுள் இயற்றும் முறையைப் பற்றி கூறும் பகுதியாப்பு. என்பதை,

"எழுத்துமுதலாஈண்டியஅடியிற்

குறித்தபொருளைமுடியநாட்டல்

யாப்பென மொழிப யாப்பறி புலவர்." (தொல்.செய்.நூற்:383)

எழுத்து முதலாக அசைச்சீர் அடி என ஈண்டு ஓதப்பட்ட அடியினாற்றான் குறித்தப் பொருளை இறுதியடியளவு முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பு என்று கூறுவர் புலவர் என்பது இளம்பூரணரின் கருத்தாக அமைகிறது.

## மரபு

செய்யுள் அமைப்பதற்கு அடிப்படையாக அமையும் நாற்சொல்லினைப் பற்றிக் கூறுவது மரபு என்பது அரங்கசாமியின்கருத்தாக அமைகிறது.

"மரபேதானும்

நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று." (தொல்.செய்.நூற்:385)

மரபாவது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நாற்சொல்லின் இயற்கையானே யாப்பின் வழிப்பட்டது என்பது இளம்பூரணரின் கருத்தாக அமைகிறது.

## தூக்கு

தூக்கு என்பது பாடல்களை அடிதோறும் துணித்து, நிறுத்தலாகிய ஓசைவேறுபாடு. தூக்கு என்னும் சொல் துணித்தல், நிறுத்துதல், பாடுதல் என்னும் பொருள்களில் வழங்கும் என்பது சுப்பிரமணியனின் கருத்தாக அமைகிறது.

"தூக்கியல் வகையேஆங்கெனமொழிப." (தொல்.செய்.நூற்:392)

தூக்கியல் வகைசொல்லப்பட்டநாலுமே. தூக்கு என்றால் ஓசை என்று பொருள் என்பது இளம்பூரணரின் கருத்தாக அமைகிறது.

## அகவலோசை

ஆசிரியம் அகவலோசையுடையது. தொடர்ந்து அகவுவது கூவுவது போன்ற ஓசை அகவலோசை என்பது தமிழண்ணலின் கருத்தாக அமைகிறது.

"அகவலென்பதாசிரியம்மே."(தொல்.செய்.நூற்:386)

அகவல் என்று வழங்கப்படும் பாவினை ஆசிரியத்திற்குரிய பாவென்று கூறுவது பேராசிரியரின் கருத்தாக அமைகிறது.

## செப்பலோசை

வெண்பா யாப்பினது ஓசை அகவலோசை அல்லாதது. ஒன்றை செப்புவது போன்ற ஓசை செப்பலோசை என்பது தமிழண்ணலின் கருத்தாக அமைகிறது.

"அஃதன் றென்பவெண்பாயாப்பே." (தொல்.செய்.நூற்:387) வெண்பாவாக ஆக்கப்பட்டது அகவலோசை அன்று. இதனைப் பிற நூலாசிரியர்கள் செப்பலோசை என்று கூறுவார்கள் என்பது இளம்பூரணரின் கருத்தாக அமைகிறது.

## துள்ளலோசை

கலிப்பாவிற்குரியது துள்ளலோசை. உலகவழக்காம் நாடோடிப் பாடல்கள் துள்ளல் நடைபெற்றிருக்கும் என்பது தமிழண்ணலின் கருத்தாக அமைகிறது.

"துள்ளல் ஓசைகலியெனமொழிப."(தொல்.செய்.நூற்:387) துள்ளலோசை என்பது கலிப்பாவிற்குரியது என்பது இளம்பூரணரின் கருத்தாக அமைகிறது.

## தூங்கலோசை

வஞ்சிப்பா தூங்கலோசையுடையது. இதுவும் ஆடலுடன் கூடியஓசை. ஆற்றொழுக்குப் போலப்பாடி ஆடும்போது எழும் ஓசை என்பது தமிழண்ணலின் கருத்தாக அமைகிறது

"தூங்கல் ஓசைவஞ்சியாகும்."(தொல்.செய்.நூற்:389)

தூங்கலாவது அறுதியற்ற ஓசைத்தாகி வருவது வஞ்சி என்பது இளம்பூரணரின் கருத்தாக அமைகிறது.

## மரபுக் கவிதை

தொன்று தொட்டு வரும் தன்மையுடையது என்பதை **மரபு** என்னும்சொல் உணர்த்தி நிற்கின்றது. இனிய ஓசை நயம் அமைந்த பாடல்களைக் கேட்டுப் பழகியவர், அதே ஓசையில் பாடல் புனைய முயன்று, பிறர் படிக்கவும், இவ்வாறே புதியன படைக்கவும் 'பாடல் அமைப்பை' எழுத்து, அசை, சீர் என அமைத்து ஒழுங்குபடுத்தியிருத்தல் வேண்டும். இவ்வாறு யாப்பிலக்கணம் தோன்ற, அடுத்தடுத்து வந்தவர் அம்மரபு மாறாமல் கவி படைக்கத் தொடங்கினர்.

ஆசிரியப்பா, வெண்பா என்னும் பா வகைகளும், ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் என்னும் பாவினங்களும் மட்டுமே இன்றைய நிலையில் மரபுக் கவிதை வகையில் செல்வாக்குப் பெற்று வருகின்றன. பா வகைகள் சீர், தளை பிறழாதவை;பாவின வகைகள் குறிப்பிட்ட வாய்பாடுகளில் அமையும் நான்கு அடிகளை உடையவை.தமிழ்க் கவிதைகளை மரபுக்கவிதை, புதுக்கவிதை என்பன போன்ற பெயர்களில் குறிப்பிடுகிறோம்.

பாக்களையடுத்துப் பாவினங்களும், அவற்றையடுத்துக் கும்மி, சிந்து போன்றனவும் தோன்றின. இவ்வாறுதான் பாடப்படவேண்டும் என்னும் வரையறை இருப்பதால் சிதறாத வடிவமாகப் பாதுகாக்கப் பெற்றுக் காலந்தோறும் இம்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

பாடுபொருளும் உத்திகளும் புதியனவாயினும் மரபு இலக்கணத்தின் படி படைக்கப்படுதலின் இவை மரபுக்கவிதை எனப்படுகின்றன.

மரபுக்கவிதை, சங்க காலத்தில் மன்னர்களோடு தொடர்புடையதாக இருந்தது. மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை, ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றைப் புகழ்வதாகவும், துணிச்சலுடன் புலவர்கள் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன. அரசவையிலோ, சங்கம் போன்ற தமிழ் அவைகளிலோ ஒன்று குழுமிய புலவர்கள் அகப்பொருள் பாடி இன்புறுத்துவதாகவும் அறிவுறுத்துவதாகவும் அமைந்தன.

இடைக்காலத்தில் பக்தி இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாகப் பாடுபொருள் இறைவனைப் பற்றியதாகவும், திருத்தலங்களின் (கோயில் உள்ள ஊர்) சிறப்பை உணர்த்துவதாகவும் அமைந்தது.சித்தர் இலக்கியம், தத்துவம், மருத்துவம், அரசர்களையும் குறுநில மன்னர்களையும் மகிழ்வுறுத்தும் சிற்றிலக்கியங்கள் என அடுத்தடுத்த காலங்களில் பாடுபொருள்கள் அமைந்தன.கவியரங்கம், வரையறுக்கப்பட்ட தலைப்பு, இயற்கை, சமூக அவலம் என இன்றைய நிலையில் மரபுக்கவிதையின் பயன்பாடு அமைகின்றது.எனவே, மரபுக்கவிதை தொழிலுக்கு உரியதாகவும், அறிவுறுத்துவதாகவும், இன்புறுத்துவதாகவும் அமைந்து வரும் நிலையை அறிகின்றோம்.

## புதுக்கவிதை

ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம், சிந்து எனக் காலந்தோறும் யாப்பு வடிவங்கள் செல்வாக்குப் பெற்றுவந்தன. மேனாட்டுத் தாக்கத்தால் உரைநடை செல்வாக்குப் பெற்ற நிலையில், யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்துருவம் கொடுக்கும் இப்படைப்பு முயற்சி, வசன கவிதை என்றே அழைக்கப்பட்டது. பின்னர், யாப்பில்லாக் கவிதை, இலகு கவிதை, கட்டிலடங்காக் கவிதை போன்ற பெயர்களை அவ்வப்போது பெற்று வரலாயிற்று.

பழக்கத்தில் உள்ள நிலையிலிருந்து சிறிதளவோ முற்றிலுமோ மாறுபட்டுத் தோன்றுவது புதுமை எனப்படும். வழிவழியாக மரபு கெடாது யாப்பிலக்கணத்தோடு பொருந்தி வரும் கவிதைகளிலிருந்து மாறுபடும் கவிதைப் படைப்புதான் புதுக்கவிதை என்பர். புதுக்கவிதைகள் உருவத்தால் மட்டுமன்றி, உள்ளடக்கம், உத்திமுறைகள் ஆகியவற்றாலும் புதுமையுடையனவாகும்.

புதுக்கவிதையைத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் மிகச் சிலரே. பலர் சமுதாய அவலம் கண்டு அவ்வப்போது கவிதைகள் புனைபவராக உள்ளனர். தனிமனித உணர்வுகளைப் பாடுவதும், நாட்டுப்பற்று, மொழியுணர்வு, பொதுவுடைமை, அநீதியை எதிர்த்தல், பெண்ணுரிமை, தலித்தியம், பகுத்தறிவு என்பனவற்றைப் பாடுதலும் இன்றைய புதுக்கவிதைகளின் நோக்கங்களாக

உள்ளன.மரபுக்கவிதை இயற்றுவது என்பது, பெரும்பாலும் அடித்தட்டு மக்களிடத்தில் இடம் பெறாததாகவே இருந்து வந்துள்ளது. புதுக்கவிதையைப் பொறுத்தவரை பெண்கள், அடித்தட்டு மக்கள், தொழிலாளிகள் எனப் பலரும் படைப்பாளராகி விடுவதனால், தங்களின் உண்மை நிலையையும், வாழ்வியல் சிக்கல்களையும், தாங்கள் எதிர்நோக்கும் தீர்வுகளையும் தெளிவாக எடுத்துக் கூற வல்லவர்களாய் அமைகின்றனர். அவர்தம் புதுக்கவிதைப் படைப்புகளும் அவர்களின் மனநிலையையும் வாழ்வியலையும் படிப்பவருக்கு நன்கு உணர்த்துவனவாகின்றன.எண்ணத்தை அழகாக எடுத்துச் சொல்வது கவிதை. சொல்வதையும் அழகிய வகையில் சொல்லப்பயன்படுவது பா வடிவங்களாகும். காலந்தோறும் மாறிய பா, பாவினம் பற்றி அறிந்து கொள்ளலாம்.

## இன்றைய நிலை

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின் மொழியமைப்பிலும், வெளியிடும் பாங்கிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. அவற்றை விரிவாகக் காணலாம்

## மரபுக்கவிதை

நற்றமிழ், தெளிதமிழ், வெல்லும் தூயதமிழ் போன்ற இலக்கிய இதழ்களில் வல்லமை படைத்த மரபுக் கவிஞர்களின் படைப்புகளும், போட்டிக் கவிதைகள் பலவும் இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கவியரங்குகளில் மரபுக் கவிதைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

பாரதியார் பிள்ளைத் தமிழ், காமராசர் பிள்ளைத் தமிழ், சிவாஜிகணேசன் பிள்ளைத் தமிழ் என்பன போன்ற மரபுவழி இலக்கியங்கள் இன்றும் படைக்கப் பெற்று வருகின்றன.

மருதூர் அரங்கராசனின் யாப்பறிந்து பாப்புனைய என்னும் நூல் இன்றைய நிலையில் மரபுக்கவிதை படைப்பவர்க்கு ஏற்ற வகையில் இயற்றப் பெற்றுள்ளது.

## துக்கவிதை

உயர்நிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் உட்படப் பலரும் எளிதில் எழுதுவதாகப் புதுக்கவிதை விளங்குகின்றது. பெண்ணியம், தலித்தியம் என்பன போன்ற கொள்கைவாதிகளும், கவியரங்கம் நிகழ்த்துவோரும், சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரும் புதுக்கவிதை நூல்களை வெளியீடு செய்யும் வழக்கத்தைத் தொடர்ந்து காணமுடிகின்றது.

நாளிதழ்கள், வார இதழ்கள், பல்வேறு மாத இதழ்கள், தை, நறுமுகை போன்ற காலாண்டிதழ்கள் எனப் பல வகை இதழ்களிலும் புதுக்கவிதைகள் சிறப்பிடம் பெறக் காண்கிறோம்.ஹைக்கூ (துளிப்பா), சென்ரியு (நகைத் துளிப்பா), லிமரைக்கூ (இயைபுத் துளிப்பா) என்னும் வகைகளும் புதுக்கவிதையின் சாராம்சமாய் நாளும் தழைத்து வளர்ந்து வருகின்றன.

## முடிவுரை

வரலாற்றுப் பெருமையும் செம்மொழி சிறப்பும் பெற்ற தமிழ் மொழியின் தொன்மை சிறப்பினை எடுத்துரைப்பது தொல்காப்பியம்.தொல்காப்பிய செய்யுளியல் சங்க இலக்கியங்கள் இயற்றப்படுவதற்கான அடிப்படைக் கூறுகளை எடுத்துரைக்கிறது. தொல்காப்பிய செய்யுளியலை அடிப்படையாகக் கொண்டுதான் மரபுக்கவிதைகள் தோற்றம் பெற்றன. மரபுக் கவிதைகளை தொடர்வது அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையிலான புதுக்கவிதைகள் தோற்றம் பெற்றன. இவ்வாறாக தொல்காப்பியம் முதற்கொண்டு தற்கால புதுக்கவிதை வரையிலான கவிதை எழுதுவதற்கான உட்கூறுகளைக் கட்டுரையின் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

## References

இளம்பூரணர் (2001) தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல்; உவமவியல், செய்யுளியல், மரபியல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

தமிழண்ணல், (2014) தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி: 4 செல்லப்பா பதிப்பகம், மதுரை

தேவிரா, (2007) தமிழ் இலக்கியத் தகவல், களஞ்சியம், ஸ்ரீ நந்தினி பதிப்பகம், சென்னை

பொன்மணி மாறன், (2002) அடோன் தமிழ் இலக்கணம், அடோன் பப்ளிங் குரூப், திருவனந்தபுரம்

இளவழகன். கோ. (2003) தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியம், தமிழ்மண் பதிப்பகம்.

சுப்பிரமணியன். ச.வே. (2009) தொல்காப்பியம் அறிமுகம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை

புலியூர்கேசிகள், (1958) சிலப்பதிகாரம்,

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License